- குடிபுகு நாட்டில் பேச்சுமொழிகளும் எழுத்து மொழியும்: அவைபற்றி மாணவர்களுக்கு என்ன தெரியும், எந்த மாற்று எப்பொழுது பயன்படுகிறது, இங்கே சிறப்புமிகு பேச்சுமொழி எது?
- கலந்துரையாடல்: முதலாவது மொழியிலும் இரண்டாவது மொழியிலும் உள்ள பேச்சுமொழி மற்றும் எழுத்து வழக்குகள் ஆகியவற்றினுடனான என் உணர்வுமிகு தொடர்பு பேச்சுமொழியின் மற்றும் எழுத்து மொழியின் நடைமுறைப் பயன்பாடு பற்றிய என் ஊகம்.

# 3.6 பல்பண்பாட்டு வினாக்களுக்கான தொடர்பு

**இலக்கு**

*பண்பாடுகளில், அவற்றுடன் மற்றும் அவற்றுக்கிடையிலான வாழ்வு பற்றிய வினாக்கள் குறிப்பாக பா.மொ.க மாணவர்களுக்கு நிகழ்காலத்துக்குரியனவாயுள்ளன. 'தொடர்பு' எனும் கருத்திட்டத்தின் நோக்கு என்பது மாணவர்கள் இவ்வினாக்கள் தொடர்பாக வேறு சூழல்களில் உள்ளவர்களுடன் கருத்துகளைப் பகிர்ந்து தம்முடைய எல்லைகளை விரிவடையச் செய்கின்றனர். அதேவேளை, கருத்திட்டம் மாணவர்களின் எழுத்து மற்றும் ஊடக ஆற்றலுக்குப் பங்களிக்கின்றது.*

வகுப்பு 5 - 9 | 45 மணித்துளிகள்

**நடைமுறை:**

- தலைப்புப் பகுதியிலிருந்து தற்காலச் சிக்கலுக்கு (பல்பண்பாட்டு இணைந்த வாழ்வு) ஆசிரியர் மாணவர்களுக்கு மற்றொரு சூழலில் இருந்து வருபவர்களின் கருத்துக்களைப் பெற்று கலந்துரையாட வேண்டும் என மதியுரை கூறுவர். இது இலத்திரனியல் தொடர்பாடல் வடிவாக (மின்னஞ்சல், முடிந்தளவு குறுஞ்செய்திகள்) அமையவேண்டும். தகுதியான தலைப்புக்களும் கேள்விகளும் பின்வருவனவற்றை உள்ளடக்கும்: இந்த நாட்டில் உள்ள வெளிநாட்டவருடன் வெறுப்புக் கொள்ளும் தனியாள் ஒருவரின் பட்டறிவுகள் – அரசியல் அமைப்பில் வெளிநாட்டவரின் நிலைப்பாடு – கல்வி அமைப்பில் பா.மொ.க வின் நிலைப்பாடு – சிறுபான்மை இனங்களின் நிலைப்பாடும் மதிப்பும், எடுத்துக்காட்டாக, றோம் மக்கள் தற்கால அரசியல் விவாதத்திலிருந்து ஒரு வினா மீதான கலந்துரையாடல்.



- வகுப்பு ஒரு தலைப்பினைத் தேர்ந்தெடுத்து அதனுடன் தொடர்புடைய பங்காளிகளையும் சூழல்களையும் பற்றிக் கலந்துரையாடும். வகுப்பறைத் தொடர்புகளுக்கு எடுத்துக்காட்டுகள்: பிறந்த நாட்டிலிருந்து ஒரு பள்ளி வகுப்பு – குடிபுகுந்த நாட்டுப் பிறிதொரு சமூகத்திலிருந்து ஒரு பா.மொ.க வகுப்பு – இன்னொரு மொழிக் குழுவினரின் பா.மொ.க வகுப்பு. (சிலவேளைகளில் பிறந்த நாட்டு கல்வி அமைச்சு வேண்டப்படும் தொடர்புகளை வழிப்படுத்தித் துணைசெய்ய முடியும்.
- தனியாள் தொடர்புகளுக்கு: உறவுக்காரர், நண்பர்கள், ஒரே மொழி அல்லது வேறு மொழித் தொடர்பாளர்கள். ஒரே சிக்கலைப் பல்வேறு சூழல்களிலிருந்து வருபவர்கள் கலந்துரையாடுவது களிப்பாகவிருக்கும். அரசியல்வாதிகளுடன் அல்லது பொருத்தமான நிர்வாகப் பொறுப்பாளர்களுடன் தொடர்புகொண்டு கருத்துக் கேட்டல் செய்யக்கூடியதாகும்.

3

- முடிவுகள் (எ.கா. தொடரான பொது வினாக்கள்) ஒப்பிடப்பட முடியும் என்பதை உறுதிப்படுத்த தொடர்புகளுக்கான வழிகாட்டல், அறிவுறுத்தல்கள் முதலிலேயே ஏற்றுக்கொள்ளப்பட்டவையாக இருக்கும்.
- போதுமான எண்ணிக்கையான பதில்கள் பெற்றுக்கொண்ட பின்னர் அவை ஆராயப்பட்டு குழுநிலைப்படுத்தி (எ.கா. ஒரு சுவரொட்டியில்) அளிக்கை செய்யப்பட்டு கலந்துரையாடப்படும்.

# 3.7 மொழிப் பயன்பாடு: வேறுபட்டது, சூழ்நிலை சார்ந்தது.

**இலக்கு**

*செயற்பாட்டுக்கான ஆற்றலுக்கும் தொடர்பாடலுக்கான ஆற்றலுக்கும் மொழி சார்ந்து தன்னை நடத்துவது மட்டுமல்ல சைகைகள், முகபாவம், பேசும் தன்மை முதலியவை பொருத்தமான சூழ்நிலை அல்லது சமூகக் கூட்டுறவுக்கு ஏற்ற வகையில் அமைதல் வேண்டும். பொருத்தமான சட்டங்கள் பெரும்பாலும் எழுதப்படாதன, ஆனால் பண்பாட்டுத் தன்மையுடையன. அதைப்பற்றிக் கூறுவதும் அதனைத் தேர்வுசெய்து பார்ப்பதும் சமூக, தொடர்பாடல் ஆற்றலை வலுப்படுத்தும்.*

வகுப்பு 3 - 9

25 - 45 மணித்துளிகள்

**நடைமுறை:**

- தலைப்புக்கு அமையக்கூடிய அறிமுகம்:
  - தூண்டக்கூடிய கற்றல் சூழல் (எ.கா. எப்படி 'நீங்கள்' (மரியாதையாகக் கூப்பிடுதல்) மற்றும் 'நீ' (முறைசாரா அழைப்பு) என்பது உண்மையில் எங்கள் மொழியிலும் நாம் தற்போது வாழும் (ஜேர்மன் மொழிபேசும்) நாட்டு மொழியிலும் எப்படி பயன்படுத்தப்படுகிறது?)
  - தொடர்பாடல் தொடர்பான தவறான விளக்கம் பற்றிய ஒரு கதை (எ.கா. 'நீங்கள்' / 'நீ' தவறு) பேசுகின்றவரோடு மிக நெருக்கமாக நின்று (அண்மையில்), உரத்த குரலில், மிகுந்த அளவிலே முறைசாரா வாழ்த்துக் கூறல்).
  - ஆசிரியர் வேண்டுமென்றே தொடர்பாடலிலுள்ள ஒரு மாதிரி எழுதாத சட்ட மீறுதலை செய்தல் தலைப்புக்கு ஒரு நல்ல அறிமுகமாக அமையலாம் (ஒரு மாணவனுடன் / மாணவியுடன் மிகுந்த முறைசார்புடன் அல்லது கீழ்த்தரமான மொழிப் பயன்பாடு பேசப்படுபவரிடமிருந்து அண்மையில் அல்லது மிகு சேய்மையில் நிற்றல், மிக மெதுவாக அல்லது மிக உரத்துப் பேசுதல்...).
- தலைப்பு பற்றிய கலந்துரையாடல், இலக்கணத் தெளிவுக்கு மேலாக, தொடர்பாடல் பயன்பாட்டுக்கு எழுதா விதிமுறைகளையும் பின்பற்றவேண்டும் என்னும் விழிப்புணர்வை ஏற்படுத்துதல்.
- குழுசார் மொழி மற்றும் மொழிசாராக் கூறுகளின் பயன்பாடு தொடர்பான காட்சிப் பரிசோதனைகள் (உடல் தொடர்பு, உரத்தகுரல், சைகைகள், முகபாவம், அண்மை, முதலியவை) நண்பர்களுடன், பொறுப்பாளர்கை செய்பவருடன், பேரன் பேர்த்திமாருடன், உடன்பிறப்புகளுடன், முதலியோருடன் தொடர்பாடும்போது எது "பொருத்தமானது" ஆகும்? எது இடத்துக்கு உகந்ததல்லாதது அல்லது பொருத்தமற்றது? ஏன்? இச் சூழலில் பேச்சுமொழி மற்றும் எழுத்துமொழிப் பயன்பாடு பற்றியும் எண்ணிப்பார்க்கவும்.
- பிறந்த மற்றும் குடிபுகு நாட்டுப் பண்பாட்டில் முறைசார் ∴ முறைசாரா பேச்சுத் தொடர்பான விதிமுறைகளை ஒப்பிடுக, உரத்தகுரல், பேசுபவர்களுக்கிடையிலான இடைவெளி, உடல் தொடர்பு, கைகுலுக்கல், வணக்கம் சொல்லும் போது முத்தம் கொடுத்தல் முதலியவை. இன்றியமையாத வேறுபாடுகள் யாவை? புதிதாகக் குடியேறுவோருக்கு எவற்றைக் குறிப்பாகப் பரிந்துரைப்பீர்கள்? (எழுத்திலான கண்காணிப்புக்குரிய ஒரு பட்டியலைத் திரட்டவும்).
- சைகைகள்: தற்போது நாம் வசிக்கும் நாட்டில் எவ்வகைச் சைகைகள், வழக்கமானவை (அல்லது விலக்கப்பட்டவை) எவை "பன்னாட்டுத்" தன்மையானவை?